***

JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 528 /2018 |
| | : | Prosecution P.W - 7 |
| NAME | : | Dr.தர்மராஜ் |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thurs day 23.10.2025.

**முதல் விசாரணை**

நான் ஆவுடையானூரில் CJ மருத்துவமனை என்ற பெயரில் மருத்துவமனை நடத்தி வருகிறேன். நான் அந்த மருத்துவமனையில் எலும்பு முறிவு மருத்துவராக உள்ளேன். கடந்த 13.10.2018 ம் வருடம் சுமார் மாலை 6.55 மணியளவில் காசியம்மாள் 42 வயதுள்ள பெண் சிகிச்சைக்காக என்னிடம் வந்தார். அவர் ஒருவரால் தாக்கப்பட்டு தென்காசி அரசு மருத்துவமனைக்கு சென்று அவர்கள் மேல் சிகிச்சைக்காக மருத்துவரின் பரிந்துரையின் பேரில் திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு அனுப்பியதாகவும் அவர்கள் அங்கு செல்லாமல் என்னுடைய மருத்துவமனைக்கு வந்ததாகவும் கூறினார். அவரை பரிசோதித்து பார்த்த போது அவருடைய வலது கை முட்டில் ஒரு பெரிய காயமும் அதிலிருந்து இரத்தப்போக்கும் எலும்பு வெளியே தெரிந்த நிலையிலும் இருந்தது. அவருடைய வலது கால் முட்டுப் பக்கத்தில் ஒரு காயமும் அதிலும் சிறிது இரத்தப்போக்கும் இருந்தது. அவருக்கு வேண்டிய முதலுதவி செய்து நுண் கதிர் படம் எடுத்து பார்த்த போது அவருடைய

வலது கை முட்டில் humurus என்ற எலும்பினுடைய அடிப்பாகத்தில் உள்ள வெளிப்பக்க உருளை உடைபட்டிருந்தது வலது காலில் Fibula என்ற எலும்பினுடைய தலைப்பாகம் முறிந்திருந்தது அதனுடன் சேர்ந்து அதன் அருகில் உள்ள Tibia என்ற எலும்பினுடைய மூட்டோடு சேர்ந்த ஒரு பாகம் உடைந்திருந்தது. அவருக்கு ஒரு யூனிட் ரத்தம் கொடுத்து அன்றிரவு அவருக்கு அறுவை சிகிச்சை செய்து வலது மூட்டு எலும்பிற்கு கம்பிகள் வைத்து பொருத்தினேன். வலது காலில் உள்ள எலும்பிற்கு ஸ்கூரு வைத்து பொருத்தினேன். அதன் பிறகு அவர் 5 நாட்கள் உள்நோயாளியாக இருந்து 19.10.2018 அன்று விடுவித்தேன். அவருக்கு ஏற்பட்ட கொடுங்காயம் என சான்று வழங்கினேன். **மேற்படி காயச்சான்று அசாஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** காயம்பட்ட நபருக்கு நுண்கதிர் படம் என்னுடைய மருத்துவமனையில் அறுவை சிகிச்சைக்கு முன்பும் அறுவை சிகிச்சைக்கு பின்னரும் எடுத்த எக்ஸ்ரே படம் எண்ணம் 4 நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன். **மேற்படி எக்ஸ்ரே படம் எண்ணம் 4 அசாஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

அன்றைய தினம் இசக்கிமுத்து என்ற 48 வயதுடைய ஆண் தன்னுடைய இடது கையில் மட்டும் இடது அக்குள் பாகத்திலும் காயமுற்று வந்திருந்தார். அவரை பரிசோதித்து பார்த்த பொழுது இடது கை பெருவிரலில் ஒரு காயமும், இடது அக்குள் பகுதியிலே தையல் போடபட்ட ஒரு காயமும்இருந்தது. அவருடைய காயத்திற்கு நான் சிகிச்சை அளித்தேன். அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என சான்று வழங்கினேன். மேற்படி இசக்கி முத்து என்பவரின் காயச்சான்று அசாஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் கொடுத்த அறிக்கையில் காயம்பட்ட நபர் எத்தனை மணிக்கு சிகிச்சைக்கு வந்தார் என துலங்காது என்றால் சரிதான். காயம்பட்ட காசியம்மாள் என்பவருக்கு நுண்கதிர் எடுத்ததாகவும் அதன் அடிப்படையில் சிகிச்சை அளித்ததாகவும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் நான் கொடுத்துள்ள ரிப்போர்ட் எக்ஸ்ரே அடிப்படையிலானது அதனால் குறிப்பிட்டு சொல்லவில்லை. மருத்துவ அறிக்கையில் எக்ஸ்ரே எண் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எனது அறிக்கையில் எக்ஸ்ரே எத்தனை மணிக்கு எடுக்கப்பட்டது என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அறிக்கையில் எதனால் காயம் ஏற்பட்டது என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். பொதுவாக இரண்டு நபர்கள் இருசக்கர வாகனத்தில் அதிவேகமாக சென்று கண்ணாடி போன்ற கூர்மையான கற்கள் மீது விழுந்தாலும் மேற்படி காயங்கள் ஏற்பட

வாய்ப்புள்ளது என்றால் வாய்ப்புள்ளது. போலிஸார் விசாரணையின் போது நுண்கதிர் படம் எடுத்து அதன் அடிப்படையில் காசியம்மாளுக்கு சிகிச்சை வழங்கியதாக குறிப்பிட்டு சொன்னேனா என்றால் சொன்னேன்.

மறுவிசாரணை இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi